# ஒன்றாறியோவில் சம்பளக் களவாடல் (Wage Theft) நாளாந்த பிரச்சனையாக உருவெடுத்துள்ளது!

(பகுதி-26) சென்ற இதழின் தொடர்ச்சி...... ஆக்கம்: டேவிட் ஆசீர்வாதம்




ஒரு தொழிலாளிக்குரிய சம்பளம் மற்றும் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளை முதலாளியால் கொடுக்காமல் விடும்போது அதனை சம்பள களவாடல் அல்லது சம்பள சூறையாடல் (Wage Theft) என பொதுவாக அழைக்கின்றனர். இந்த சம்பள திருட்டு நிறுவனங்களில் பல்வேறு முறைகளில் இடம்பெற்று வருகின்றன. இந்த களவு என்ன முறையில், எந்த பரிமாணத்தில் இடம்பெற்றாலும் அவை யாவற்றையும் சம்பள சூறையாடல்ஃகளவாடல் என்ற ஒரு பொதுவான வரைவிலக்கணத்துக்குள் கொண்டு வர முடியும்.

எந்த ஒரு தொழிற்சங்கத்திலும் அங்கத்துவம் பெறாத ஊழியர்களை பொறுத்தவரையில் இது சாதாரணமாக, காலம் காலமாக இடம் பெற்று வருகின்றது. புத்தகங்களில் பதிவுகளை மேற்கொள்ளாமல் தொழிலாளர்களுக்கான கூலியினை காசாக வழங்கும் போதும் இது சாதாரணமாக இடம்பெற்று வருகின்றது. காலம் காலமாக தொழிலாளர்களும் தங்களது வேதனைகளையும் வலியினையும் தாங்கிக் கொண்டே வந்துள்ளனர்.

தொழிலாளர்களுக்குரிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்படவில்லை என்றால் அது சம்பளக் களவாடல் என நாம் நினைக்கின்றோம். அது உண்மைதான். ஆனால் அதற்கு மேலும் பல அர்த்தங்கள் உண்டு. அதாவது, நாம் வேலை செய்யும் போது அதற்கான மணித்தியாலங்கள் சரியாக கணக்கில் எடுக்கப்படாமல், குறைத்து கணக்கிடப்பட்டால் நாம் மேலதிக நேர வேலையினை கூலியின்றி செய்கின்றோம். ஒன்றாறியோ மாகாண தொழிற்சட்டத்தின் பிரகாரம் (Employment Standards Act) ஒரு தொழிலாளி கிழமை ஒன்றிற்கு 44 மணித்தியாளங்களுக்கு மேல் வேலை செய்தால், அவ்வாறு மேலதிகமாக வேலை செய்யப்பட்ட ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ஒன்றரை மடங்கு கூலி வழங்கப்படல் வேண்டும். விடுப்புக்குரிய (vacation) சம்பளம் அல்லது பொது விடுமுறைக்குக்குரிய சம்பளம் வழங்கப்படாவிட்டால் அல்லது அடிப்படை சம்பளத்தினை விட குறைத்து வழங்குதல் அல்லது சட்ட ரீதியற்ற முறையில் சம்பளத்திலிருந்து கழிவுகளை செய்தல் யாவும் சம்பள சூறையொடுதல் ஆகும். நாம் ஒரு தொழிலாளியாக வேலை செய்கின்ற போது சுதந்திர ஒப்பந்தக்காரராக (Independent contractors) முதலாளியால் தீர்மானிக்கப்பட்டால் அதுவும் சம்பளக் களவாடல் ஆகும்.

ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் உட்பட தொழிலாளர்களை தவறாக வகைப்படுத்தி (Misclassification), அவர்களுக்குரிய கொடுப்பனவு கள் மற்றும் ஏனைய சலுகைகளை மறுப்பது தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. தொழில் தளங்களில் உப ஒப்பந்தங்கள் (subcontracting) செய்யப்படுவதன் காரணமாகவும் அந்த ஒப்பந்தங்களில் பல அடுக்குகளும் (layers), பல்வேறு உப ஒப்பந்தங்களும் தரப்பினர்களும் சம்பந்தப்படுவதன் காரணமாகவும் எந்தவொரு தொழிற்சங்கத்தையும் சாராத ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா நாடுகள் விதிவிலக்கு அல்ல. ஒன்றாறியோவின் தொழில் மற்றும் நிதி அமைச்சுகளினால் வெளியிடப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம், 2021-2022 நிதி ஆண்டில் மாத்திரம் 9 மில்லியன் டொலர்கள் ($ 9 Million) தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய சம்பளம் கொடுக்கப்படாமல், அவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். அதாவது தொழிலாளர்களுக்குறிய சம்பளம் தொழில் தருநர்களினால் சூறையாடப்பட்டுள்ளது, என டவுன்டவுன் சட்ட சேவைகள் (Downtown Legal Services) மற்றும் பார்க்டேல் சமூக சட்ட சேவைகள் (Parkdale Community Legal Services) நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. பொருளாதாரக் கொள்கைகள் நிறுவனத்தினால் (Economic Policy Institute) அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம், ஐக்கிய அமெரிக்காவில் ஆண்டுதோறும் 50 பில்லியன்களுக்கு ($50 Billion) மேற்பட்ட தொகை தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படாமல் தொழில் வழங்குநர்களினால் சூறையாடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதாரணத்திற்கு, கனடாவில் பாரவூர்தி தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் அவர்களுக்கான சரியான சம்பளம் கொடுக்கப்படாமையும் ஒன்றாகும். கனேடிய பொருளாதாரத்தினை முன்நோக்கி நகர்த்துவதில் பாரவூர்தி தொழில் (Trucking Industry) முக்கிய பங்கினை வகிக்கின்றது. இந்த தொழில்துறை தனது பொருளாதார நடவடிக்கைகளின் ஊடாக வருடாந்தம் $65 பில்லியன் வருமானத்தை ஈட்டுகின்றது. இத்துறையில் 10,000 க்கு மேற்பட்ட கம்பெனிகள் தற்போது 450,000 மக்களை வேலைக்கு அமர்த்தியுள்ளன. இதில் 300,000 பேர் பாரவூர்தி சாரதிகளாக (truck drivers) வேலை செய்கின்றனர்.

கனடா - ஐக்கிய அமெரிக்கா வர்த்தகத்தில் 80% க்கு மேற்பட்ட பொருட்கள் இந்த பாரவூர்திகள் மூலமே இரு நாடுகளுக்கும் இடையில் பரிமாறப்பட்டு வருகின்றன. இத்துறை வருடாந்தம் 17 பில்லியன் டொலர்களை வரி வருமானமாக கனடாவுக்கு வழங்குகின்றது. கனேடிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) இத்துறையின் பங்கு 3.5 வீதமாகும்.

இத்துறையில் சாரதிகளுக்கான பல பிரச்சனைகள் இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. அதில் ஒன்று என்னவெனில், பாரவூர்தி கம்பெனிகள் மற்றும் முதலாளிமார்கள் இந்த சாரதிகள் மற்றும் தொழிலாளர்களை தங்களது தொழிலாளர்களாக கருதாமல், அவர்களை சுதந்திர ஒப்பந்தக்காரர்களாக (independent contractors) தவறாக வகைப்படுத்து கின்றனர். இதன் காரணமாக இந்த தொழிலாளர்களுக்கு வேலையில் காயம் மற்றும் ஆபத்து ஏற்படும் பொழுது தொழிலாளர் நட்டஈட்டிற்கு (Workers' Compensation - WSIB) விண்ணப்பிக்க முடியாது. அத்துடன் ஒரு தொழிலாளிக்கு தொழில் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைக் கூட பெற முடியாமல் போய்விடுகின்றது.







இந்த ட்ரக் தொழிலாளர்கள் தாங்கள் வேலை செய்த கம்பெனிகளிலிருந்து தங்களுக்குரிய சம்பளம் வழங்கப்படாமை தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகளை தொழிலாளர் நலன் காக்கும் நிறுவனங்களுக்கும் தொழில் அமைச்சிற்கும் வழங்கியுள்ளனர். உதாரணத்திற்கு, பிரம்டனில் இயங்கும் ட்ரக்கிங் கம்பெனி ஒன்று தங்களது பல்வேறு தொழிலாளர்களுக்குரிய சம்பளங்களை வழங்காமல், இதுவரையில் தெரிந்தவரை $115,000 சம்பளக் களவாடலை (wage theft) செய்துள்ளதாக சிடிவி செய்தி நிறுவனம் கடந்த மார்ச் மாதம் தெரிவித்தது. இதனை பீல் பிராந்திய தொழிலாள சமூக சேவைகள் நிறைவேற்றுப் பணிப்பாளர் நாவி அஜ்லா (Navi Aujla, Executive Director at Labour Community Services of Peel Region) உறுதி செய்தார். இந்த நிறுவனங்களும் தொழிலாளர்களும் மத்திய அரசின் தொழிற்சட்டத்திற்குக்கீழ் செயல்படுபவர்கள். இது சம்பந்தமான முறைப்பாடுகளை தாங்கள் அரசுக்கு தெரிவித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வலுவான தொழில் சட்டங்கள் இல்லாமையும் இருக்கின்ற சட்டங்களை தீர்க்கமாக அமுல்படுத்தாமையும் சம்பளக் களவாடலை ஊக்குவிக்கின்றது. நாம் வேலை செய்கின்ற இடத்தில் வேலைக்கான போதிய பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் இல்லாத காரணமாக சம்பளக் களவாடல் பற்றி கதைக்க தொழிலாளர்கள் தயங்குகின்றனர். அதனால் உண்மையில் எவ்வளவு தொகை இவ்வாறாக சூறையாடப்படுகின்றது என்ற விடயங்கள் வெளியே வருவதில்லை. போதிய குடியுரிமை அந்தஸ்தும் சட்டரீதியாக வேலைக்கு உத்தரவாதமும் பாதுகாப்பும் இருக்குமாக இருந்தால் தொழிலாளர்கள் துணிந்து இது பற்றி கதைக்கக்கூடியதாக இருக்கும். தொழிலாளர்களின் வேலைத்தள உரிமைகள் பற்றி சமூக நல நிறுவனங்கள் தொடர்ந்தும் விழிப்புணர்வு கருத்தரங்குகளையும் பயிற்சி பட்டறைகளையும் மேற்கொண்டு செல்லுதல் அவசியம்.

பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்கள் இந்த சம்பள சூறையாடலுக்கு முகம் கொடுத்தால் அல்லது வேலைத்தளத்தில் வேறு பல பிரச்சினைகளை எதிர்நோக்கினால் அவர்கள் ரொறன்ரோவில் இயங்கும் தொழிலாளர் நடவடிக்கை நிலையத்திற்கு (Workers' Action Centre) 416 - 531-0778 Ext.290 என்ற தொலைபேசியில் அழைத்து, தமிழிலேயே தங்களது பிரச்சினைகளுக்கு நீதி வேண்டிய ஆலோசனைகளை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலதிக தகவல்களுக்கு, Workersactioncentre.org மற்றும் justice4workers.org இணையதளங்களுக்கு விஜயம் செய்யுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஆதாரம்: In These Times, CTV News, CBC News Toronto & Justice4workers.org)

இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்.

இதன் தொடர்ச்சி அடுத்த இதழில் தொடரும்..